அமைக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடிதம் கொடுத்திருக்கின்றேன். முத்துகாப்பட்டி ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த முத்துகாப்பட்டி கிராமத்தினை துறை ஆய்வு செய்து, அரசு விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 293, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

293—

நூல் கொள்முதல்

***7363—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விலையில்லா சீருடை, வேட்டி, சேலை வழங்கும் திட்டங்களுக்குத் தேவையான நூலைக் கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

2014 ஜூலை 31]

விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்திற்கு ஆண்டு முழுவதும் தேவைப்படும் நூலைக் கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகக் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருத்தில் நிறைந்த, முக்கிய சீரிய திட்டங்களில் ஒன்று, ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையிலே செயல்படுத்திவரும் விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டமாகும். வேட்டி சேலைகள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான பருத்தி நூல்களை முழுமையாக அரசுக் கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்ய இயலாது. தற்போது இயங்கிவரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளால் மேற்கண்ட இரு திட்டங்களுக்கு, அதாவது சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டம் என இரண்டிற்கும் சேர்த்து மொத்த நூல் தேவையில் 25 சதவீத அளவிற்கு மட்டுமே பூர்த்தி செய்ய இயலும். எஞ்சியுள்ள நூல் தேவைக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் செயல்பட்டு வரும் ஒப்பந்தக் குழுவின்மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000-ன்படி நூல் கொள்முதல் செய்யப்பட்டு, நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்றும், அவை 25 சதவீதம் மட்டுமே நூல் தேவையைப் பூர்த்தி செய்ய இயலும் என்றும், மீதம் இருக்கக்கூடிய நூல் தனியாரிடமிருந்து ஒப்பந்தத்தின் மூலமாக வாங்கப்படுவதாகவும் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்த காலத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் தொடங்கப்பட்டு, இயங்கிவந்தன. இப்போது 5 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளையும், முழுமையாக மூன்று ஷிப்டுகள் இயக்கினால்,

அறிவித்திருக்கக்கூடிய விலையில்லா வேட்டி சேலைகள், குழந்தைகளுக்கான விலையில்லா சீருடைத் திட்டம் ஆகியவற்றிற்குத் தேவையான துணி நூலை ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தே பெறமுடியும் என்பது என்னுடைய கருத்து. அதோடு மூடப்பட்டிருக்கக்கூடிய நூற்பாலைகளில் தேவையையொட்டி viable ஆக இருக்கக்கூடிய ஆலைகளை இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டால், நமக்குத் தேவையான நூல்களைத் தனியாரிடமிருந்து பெறாமல், கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகவே பெற முடியும். அதேபோல, காவல் துறைக்குத் தேவையான துணிகளை வாங்குவதற்கு என்.டி.சி. ஆலைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் அரசு சிந்தித்து, ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள்மூலமே விலையில்லா வேட்டி சேலை மற்றும் விலையில்லா சீருடைத் திட்டம் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் நூலை முழுமையாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டிலே இயங்கிவரும் அரசு கூட்டுறவு நூற்பாலைகள்கூட கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூடப்பட்டிருந்தன. எப்பொழுதெல்லாம் தி.மு.க. ஆட்சி வந்ததோ அப்போதெல்லாம் இயங்கிவந்த நூற்பாலைகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்த பின்புதான் இப்போது இயங்கிவரக்கூடிய 5 நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை இன்னும் கூடுதலாக்க வேண்டுமென்பதற்காக சுமார் 104 கோடி ரூபாயைக் கொடுத்து, அதற்கான பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஆறு மாத காலத்திற்குள்ளாக அந்தப் பணிகள் முடிவடைந்த பின் இப்போது பெறக்கூடிய உற்பத்தியான 25 சதவீத நூல் வகைகளை, 50 சதவீதமாகப் பெறமுடியும்.

முற்பகல் 10-55

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீதம் இருக்கக்கூடிய அந்த ஆலைகளையெல்லாம் நிச்சயமாகக் கவனத்தில்கொள்வார்கள். நெசவாளர் சமுதாயத்திற்காகவும், அங்கே

2014 ஜூலை 31]

பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய வகையிலேயும்தான், ரூ.104 கோடியை சிறப்பு இனமாக, ஒதுக்கீடு செய்தார்கள். மூடப்பட்டிருக்கும் மற்ற நூற்பாலைகளின் நிலையையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதற்குத் தேவையான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சொன்னதையும் செய்வார்கள், சொல்லாததையும் செய்து காட்டக்கூடியவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லி, மீண்டும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதன் தொடர்ச்சியாக ஒரு தகவலைச் சொல்ல விரும்புகின்றேன்.

விலையில்லா வேட்டி-சேலைகளுக்கு 25% நூல் பெறுவதுபோல, முதியோர்கள் O.A.P. வாங்கக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற விலையில்லா வேட்டி-சேலைகள், பள்ளிக்கூட மாணவர்களுக்கு வழங்கக்கூடிய சீருடைகள் இவை அனைத்திற்குமே இந்த 5 கூட்டுறவு ஆலைகள் ஒட்டுமொத்தமாக உற்பத்தி செய்யக்கூடிய 2,120 மெட்ரிக் டன் நூல்களைப் பெற்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு உற்பத்திச் செய்யப்படுகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தேசிய பஞ்சாலைக் கழகத்தின் மூலமாக 7 ஆலைகள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தேசிய பஞ்சாலைக் கழகத்தின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய ஆலைகள் Composite Weaving Unit-களாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நூலை நூற்று துணியாக நெய்யக்கூடிய அளவிற்கு அந்த ஆலைகள் எல்லாம் செயல்படுவதற்கான சூழல் இங்கே இருந்துகொண்டிருக்கிறது. அதைப்போல, கூட்டுறவு நூற்பாலைகளில் தாராபுரம் கூட்டுறவு நூற்பாலையின்கீழ் profit-ஆக ஓடிக்கொண்டிருந்த ஆலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. தி.மு.க. ஆட்சியில்தான் அவை மூடப்பட்டன என்பது உண்மை. அதில் மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால், இப்போது viable-ஆக இருக்கக்கூடிய அந்த ஆலைகளை ஏற்று நடத்துகிறபோது, அவை Composite Weaving Unit-களாக மாற்றப்பட வேண்டும். தமிழக அரசு அறிவித்திருக்கக்கூடிய விலையில்லா வேட்டி-சேலைகள், முதியோர்களுக்கான வேட்டி-சேலைகள், பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைகள், போக்குவரத்துத் துறையில் பணியாற்றக்கூடிய ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்குக் கொடுக்கக்கூடிய சீருடைகள், மருத்துவமனைகளில் பணியாற்றக்கூடியவர்களுக்கு வழங்கக்கூடிய துணிகள் எனப் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. அனைத்துத் துறைகளுக்கும், காவல் துறைக்கும் துணிகள் தேவைப்படுகின்றன. காவல் துறையில் பணியாற்றக்கூடிய காவலர்களுக்குத் தேவையான துணிகள் N.T.C. ஆலைகளில் இருந்துதான் பெறப்படுகின்றன. எனவே, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தத் தேவைகளைப் பெறுவதற்கான முறையில் N.T.C. ஆலைகளையும் உள்ளடக்கி, மூடியிருக்கக்கூடிய ஆலைகளில் viable-ஆக இருக்கக்கூடிய ஆலைகளை Composite Weaving Unit-களாக மாற்றி, அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பல்வேறு கேள்விகளைத் தொடுத்திருக்கிறார்கள். இந்த N.T.C. ஆலைகளைப் போன்று தமிழக அரசின் கூட்டுறவு நூற்பாலைகளை Composite Weaving Unit-களாக மாற்றிச் செயல்பட வேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள்.

துறை மூலமாக நேரடியாக அதை ஆய்வுசெய்து, அதற்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதை அறிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதைச் செயல்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு காவல் துறைக்கு, போக்குவரத்துத் துறையின் ஒரு பகுதிக்கு, மருத்துவமனைகளுக்குத் தேவைப்படக்கூடிய சில துணி வகைகள் இவை அனைத்தும் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் உற்பத்தி செய்து

2014 ஜூலை 31]

வழங்கி வருகின்றார்கள். இன்னும் செயல்படாத ஆலைகளையெல்லாம் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 294, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

294—

மீனவர்களுக்கு வீடுகள்

***5079—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் உள்ள நலிந்த உள்நாட்டு மீனவர்களுக்கு 2004-2005 ஆம் ஆண்டு முதல் இதுவரை 221 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேகம் கிழிந்துடல் காட்டி மறைந்திடும் மின்னலைப்போல, ஒரு மணித் துளி நேரத்தில் மக்கள் பிணியினைத் தீர்த்து வாகை சூடும் வெற்றித் திருமகளாம்!*